

# வசந்தம்

சிற்றிதழ்

கிருஷ்ணார்த்தி ஃபவுண்டேஷன் இந்தியா ஜூன் 2002 இதழ் 10


# ஜே. கிருஷ்ணார்த்தி

## ஓர் அறிமுகம்

உலகமெங்கும் கீர்த்தி பெற்ற ஞானி ஜே. கிருஷ்ணார்த்தி அவர்களின் போதனைகள் தமிழ் அன்பர்களைச் சென்றடைய வேண்டும் என்பதே எனது இந்த அறிமுகப்பகுதியின் நோக்க மாகும்.

ஆந்திர மாநிலத்தில் உள்ள மதனப்பள்ளி என்ற ஊரில் 1895 ஆம் ஆண்டு அவர் பிறந்தார். எதிர்காலத்தில் ஒரு பெரிய ஆசானாக, ஞானியாக, உலகத்திற்கு நல்வழிகாட்டும் மகா புருஷராக மலரக்கூடிய இயல்புகள், அவரிடம் இளம் வயது முதலே தெரிந்தது.

கிருஷ்ணஜி என்று உலகம் முழுதும் பிரியமுடன் அழைக்கப்பட்ட ஜே. கிருஷ்ணார்த்தி மனிதனை அவனது துக்கத்திலிருந்து முழுமையாக விடு வித்து சுதந்திரப் பறவையாகச் செய்வதே

(2ஆம் பக்கம் பார்க்க)

வசந்தம் நண்பர்களே,

வசந்தம் சிற்றிதழ் பதிப்பு ஆரம்பித்து ன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. பல ஆயிரக்கணக்கான தமிழ் அன்பர்களை ஜே. கிருஷ்ண ர்த்தி அவர்களின் போதனைகள் சென்றடைய வைத்துள்ளது, வசந்தம். பலதரப்பட்ட தமிழ் அன்பர்கள் வசந்தம் இதழ் குறித்து மகிழ்ச்சி தெரிவித்து எங்களுக்குக் கடிதம் எழுதியுள்ளனர்.

வசந்தம் முதல் இதழில் ஜே. கிருஷ்ணார்த்தி அவர்களைப்பற்றிய சிறு வாழ்க்கைக் குறிப்பை வெளி யிட்டிருந்தோம்.பல ஆயிரக்கணக் கான நண்பர்கள், முதல் இதழ் வெளி வந்த பின்பு, வசந்தம் இதழ் அனுப்பு மாறு கேட்டுக் கொண்டதற்கு இணங்க, பின் வந்த இதழ்களை அனுப்பி வைத்து வருகிறோம். அவர்களின் கவனத்திற்காக ஜே. கிருஷ்ணார்த்தியின் வாழ்க்கைக் குறிப்பை மீண்டும் இந்த இதழில் வெளியிடுவதில் மகிழ்ச்சியடை கிறோம்.

அன்பு என்பது பற்றி ஜே. கிருஷ்ணார்த்தி அவர்கள் நடத்திய சொற்பொழிவின் ஓர் பகுதியையும் இங்கு உங்களுக்கு அளிக்கிறோம்.

*'Freedom from the known'* என்ற உலகம் முழுவதும் பரவலாக வர வேற்கப்பட்ட நூலின் தமிழாக்கம் ''அறிந்ததனின்றும் விடுதலை'' என்ற நூல்.

அதிலிருந்து 'அன்பு' பற்றிய சொற்பொழிவின் ஒரு பகுதியை வெளியிட்டுள்ளோம்.

இந்நூலை வாங்க விரும்புவோர் எங்களுக்கு எழுதவும். (விலை ரூ. 50/- தபால் செலவு ரூ. 20/- (நூல்-அஞ்சல்).

மே மாதம் 15ம் தேதி ஜே. கிருஷ்ணார்த்தி அவர்களின் போ தனைகள் மட்டும் அடங்கிய ஆங்கில *Web site (வெப்சைட்) ஆரம்பித் துள்ளோம். அவற்றைப் பார்த்துப் படிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

* www.jkrishnamurti.org.

# அன்பு

ஒருவருக்கொருவர் உள்ள உறவு முறையில் பாதுகாப்புத் தேடுவதில் தான் துயரமும், பயமும் வருகிறது. இந்த தேடுவதில் தான் பாதுகாப்பற்ற தன்மை யையும் வரவழைத்துக் கொள்கிறோம். எந்த உறவுமுறையிலாவது நிரந்தரப் பாதுகாப்பு இருப்பதைக் கண்டிருக் கிறீர்களா? அன்பாக இருப்பதிலும், அன்பைப் பெறுவதிலும் பாதுகாப்பை வேண்டுகிறோம். ஆனால், ஒவ்வொரு வரும் தன்னுடைய பாதுகாப்பைத் தேடிக் கொள்ளும்போது, தன்னுடைய குறிப் பிட்ட பாதையில் மனம் செல்லும் போது அன்பு எப்படி நிலைத்து நிற்க முடியும். யாரும் நம்மிடம் அன்பாக இருப்ப தில்லை என்கிறோம், ஏனெனில், எப்படி அன்புடன் இருப்பது என்று நமக்கே தெரியவில்லை.

அன்பு என்றால் என்ன? அந்தச் சொல் பொருளற்றதாக ஆக்கப்பட்டு களங்கமடைந்து விட்டதால் அதைப் பயன்படுத்தவே தயங்குகிறேன். எல்லோரும் அன்பைப் பற்றிப் பேசு கிறார்கள். ஒவ்வொரு பத்திரிக்கையும் செய்தித்தாளும், பாதிரிமார்களும் ஓயாமல் அன்பு பற்றிப் பேசுகிறார்கள். என் நாடு, என் அரசன், நான் எழுதிய புத்தகம், அந்த அழகான மலை, என் மனைவி, என் கடவுள், என் இன்பம் என்பன போன்ற பலவற்றை நேசித்து அன்பு செலுத்துவதாகக் கூறுகிறோம். அன்பு என்பது ஒரு கருத்தா? அது வெறும் கருத்து என்றால் அதைப் பழக்கத்தில் கொண்டு வரலாம், வளர்க்கலாம், போற்றலாம், அதனுடன் விளையாடலாம் அல்லது நமக்கு வேண்டியவாறு திரித்துக் கொள்ளலாம்.

(2ஆம் பக்கம் பார்க்க)

**ஜே. கிருஷ்ணர்த்தி ஓர் அறிமுகம்...**
(தொடர்ச்சி)

தனது வாழ்க்கைப் பணி என்று அறைகூவி அதன்பின் சுமார் 60 ஆண்டு களுக்கும் மேலாக உலக மெங்கும் பயணம் செய்து நம்முன், நம் மனதுள், நமது வாழ்க்கை முறையில் ஏற்பட வேண்டிய அடிப்படையான மாற்றத்தின் அவசியம் குறித்து பல்வேறு மக்க ளிடையே பேசி வந்திருக்கிறார். மத குருமார்கள், விஞ்ஞானிகள், பேரா சிரியர்கள், சாதுக்கள், அரசியல் தலைவர் கள், மாணவர்கள், எழுத்தாளர்கள், ஆண்கள், பெண்கள், முதியோர், இளைஞர், துக்கத்தில் கிடந்தோர் என்று பலதரப்பட்ட மக்கள் அவரைச் சந்தித்து உரையாடியுள்ளனர்.

அவர் உலகிற்கு எந்தவித ஏட்டுச் சித்தாந்தத்தையோ அல்லது வரட்டுத் தத்துவத்தையோ போதிக்கவில்லை. மாறாக, வன்முறையும் சீரழிவும் நிறைந்த நவீன சமுதாயத்தில் வாழ்வதில் ஏற் படும் நம் பிரச்சனைகள், பாதுகாப்பை விரும்பி, நமது முடிவில்லாத தேடல், பயம், கோபம், பொறாமை, துக்கம் போன்ற மனிதச் சுமைகளிடமிருந்து விடுபட நாம் செய்யும் முயற்சிகள் போன்ற நமது தினசரி வாழ்க்கை பற்றிய விஷயங்கள் குறித்தே அவர் பேசி வந்திருக்கிறார்.

காலம், கர்மவினை, ஆத்ம ஞானத்தின் அவசியம், உண்மையான ஆன்மீக மனம், இறைநிலை, தியான நிலை, மரணமிலாப் பெருவாழ்வு, மனித மனத்தினுள் வேரூன்றி இருக்கும் அச்ச உணர்வு, துக்கம், நமது தற்போதைய வாழ்க்கை முறையின் அவலநிலை, நம் எண்ணங்களுக்கு அப்பாற்பட்ட புனிதம் அல்லது இறைநிலை என்று ஒன்று உண்டா என்ற பல விதமான விஷயங் கள், கேள்விகள் குறித்து அற்புதமான ஓர் புதிய முறையில் விளக்கம் அளித் துள்ளார். பரம்பொருள் அல்லது கடவுள் என்ற ஒன்றை நாடும் நமது ஓயாத தேடலுக்கு ஓர் புதிய அர்த்தத்தையும், அணுகுமுறைகளையும் அவரது போதனைகள் நமக்கு அளிக்கின்றன.

நவீன யுகத்திற்கு மிகவும் ஏற்ற தான அவரது போதனைகள் கால வரையறைகளுக்கு, மதப்பிரிவுகளுக்கு அப்பாற்பட்ட நம் எல்லோருக்கும் பொதுவான பொக்கிஷமாகும். திறந்த மனதோடு ஆழ்ந்து அவரது போதனை களை பற்றிய சிந்தனை செய்வோருக்கு மனத்தெளிவும், ஆத்ம உணர்வும் ஏற்படுவது உறுதி என்று கூறலாம்.

1986 ஆம் வருடம் தனது 91-வது வயதில் அவர் இயற்கை எய்தினார். கிருஷ்ணர்த்தி டிரஸ்ட், கிருஷ்ணர்த்தி பவுண்டேஷன் இந்தியா என்ற இரண்டு பொதுநல அறக் கட்டளைகளும் சேர்ந்து அவர் விட்டுச் சென்ற பணியைத் தொடர்கின்றன. உலகமெங்கும் சுமார் 50 மொழிகளில் அவரது சொற்பொழிவுகள், சம் பாஷணைகள் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன. உலகம் முழுவதும் பல லட்சக்கணக்கானோர் அவரது போதனை கள் பற்றி அறிந்துள்ளனர். அவர் ஆற்றிய சொற்பொழிவுகள், சம் பாஷணைகள் சுமார் 2500 ஒலி நாடாக்களில், 600 ஒளி நாடாக்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதுவரை ஆங்கிலத்தில் சுமார் 60 புத்தகங்கள் வெளியிடப் பட்டுள்ளன. தமிழ், மலை யாளம், தெலுங்கு, கன்னடம், மராட்டி, ஒரியா, குஜராத்தி, பஞ்சாபி, உருது, ஹிந்தி போன்ற பல இந்திய மொழிகளில் அவரது போதனைகள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. தமிழில் அறிந் தனின்றும் விடுதலை, ஓர் புதிய தலைமுறையினை தோற்றுவிப்போம், வாழ்க்கையென்னும் புத்தகம், ஒரே ஒரு புரட்சி என்று நான்கு புத்தகங்கள் வெளியிடப் பட்டுள்ளன. மேலும் பல புத்தகங்கள் மொழிபெயர்க்கப் பெற்று வருகின்றன.

மேலும் நாங்கள் இந்தியாவில் ஏழு கல்வி நிலையங்கள் நடத்தி வருகிறோம். அவர் போதனைகளில் ஆர்வம் உள் ளோர் அமைதியான சூழ்நிலையில் அவற்றைப் படிக்க, கேட்கக் கூடிய வசதிகள் அடங்கிய Study centre என்ற அமைப்பும் இந்த கல்வி நிலையங்களில் உள்ளன.

சென்னையில் கிரீன்வேஸ் சாலை யில் வஸந்த விஹார் என்று அழைக்கப் படும் இந்த அழகான பூஞ்சோலையில் கிருஷ்ணர்த்தி பவுண்டேஷன் இந்தியா, கிருஷ்ண ர்த்தி டிரஸ்ட் என்ற அறக் கட்டளைகள் செயல்பட்டு வரு கின்றன. கிருஷ்ணர்த்தியின் சொற் பொழிவுகள் அடங்கிய ஒலி ஒளி நாடாக்கள், அவரது வாழ்க்கை பற்றிய புகைப்படங்கள், குறிப்பேடுகள், விபரங் கள், புத்தகங்கள் அவர் கைப்பட எழுதிய தொகுப்புக்கள் போன்றவை பல நூறு ஆண்டுகளுக்கு அழியாமல் வரும் தலைமுறையினருக்கு பயன்பட ஏது வாக பாதுகாப்புப் பெட்டகத்தில் வைக்கப்பட்டு பராமரிப்புப் பணியைச் செய்து வருகிறோம். அவரது சொற் பொழிவுகள் அடங்கிய ஒலி ஒளி நாடாக்கள், பல மொழிகளில் புத்தகங்கள் ஆகியவற்றை இங்கிருந்து வெளி யிடுகிறோம்.

ஆர்வம் உள்ளோர் ஓர் அமைதி யான சூழ்நிலையில் அவரது போதனை களை படிக்க, கேட்க பல புத்தகங்களும் ஒலி, ஒளி நாடாக்களும் அடங்கிய Krishnamurti Study Centre என்ற நூலகமும் இங்குள்ளது. இந்த இலவச வசதியை விரும்பும் அன்பர்கள் அனைவரும் வந்து உபயோகப்படுத்திக் கொள்ள லாம்.

---

**அன்பு ...**
(தொடர்ச்சி)

நான் கடவுளை அன்புடன் நேசிக்கிறேன் என்றால் என்ன அர்த்தம். உங்கள் கற்பனையில் ஒன்றைத் தோற்று வித்துக் கொண்டு உங்களையே, பலர் போற்றக் கூடிய குணாதிசயங்களைக் கொண்ட வராகக் கருதி அந்தக் கற்பனையையே வளர்த்துத் தெய்வீகமாகக் கருதிப் போற்றி வணங்குகிறீர்கள். ஆகையால், அன்புடன் கடவுளை நேசிக்கிறேன் என்று கூறுவது அபத்தமாகும். நீங்கள் கடவுளை வழிபடும்போது உங்களை யே வழிபடுகிறீர்கள். அது அன்பு அல்ல.

மனித இனத்துக்கே உரியதான அன்பு என்பதைச் சரிவரப் புரிந்து கொள்ளாமையினால் அதை வெறும் கருத்துகளாக்கி விடுகிறோம். மனித னுடைய கஷ்டங்களுக்கும் பிரச்சினை களுக்கும், சங்கடங்களுக்கும் விடிவு, அன்பு ஒன்றால் தான் முடியும். அன்பு என்றால் என்ன என்று எப்படிக் கண்டு பிடிப்பது, அதற்கு வெறும் விளக்கங்கள் கூறினால் மட்டும் போதுமா? அன்பு என்பதற்கு மதங்கள் ஒரு வழியில் விளக்கமும், சகம் இன்னொரு வழியிலும் விளக்கமும் கூறுகிறது. அந்த விளக்கங்களில் ஒன்றுக்கொன்று மாறு படும் பகுதிகளும் உண்டு. மரியாதை யுடன் வழிபடுவது, பாலுறவு இன்பம்

தருவது, உணர்வுகளின் பரிமாற்றம், தோழமை எல்லாம் அன்பு அல்ல. ஆனால் நாம் இவற்றைத் தான் அன்பின் அளவு கோலாக, மாதிரிகளாக, வகை களாகக் கொண்டு ஒவ்வொருவருக்கும் அன்பை வழங்குகிறோம். அன்பு எனப்படுவது தனது என்றும் இந்திரிய சம்பந்தமான உணர்ச்சிகள் என்றும் வகைப்படுத்திக் கொண்டுள்ளோம். ஆனால், மதங்கள் அன்பு எனப்படு வதற்கு இவற்றிற்கும் அப்பால் சில பொருள் உண்டு என்று கூறுகின்றன. மனிதர்களிடையே நிலவும் அன்பு என்னவென்று பலர் கூறும்போது இன்பம், போட்டி, பொறாமை, பற்றுதல், அடக்குதல், மற்றவர்களின் எண்ணங் களில் குறுக்கிடுதல் என்பன போன்ற வற்றையும் காண்கின்றனர். அன்பு என்று கூறப்படுபவற்றுள் உள்ள சிக்கல்களைக் கண்ட இவர்கள் இன்னொரு விதமான அன்பு தெய் வீகமானதாக, அழகானதாக, யாரும் தொடுவதற்கரியதாக, களங்க மில்லாததாக இருக்கிறது என்று கூறலா யினர்.

உலகம் முழுவதும் ஆன்மீகவாதி கள், ஒரு பெண்ணை கண்ணெடுத்துப் பார்ப்பதும் கூடத் தவறு என்று கூறுகின்றனர். பாலுறவில் ஈடுபடுபவர் கள் கடவுளை நெருங்கக் கூட முடியாது என்று கூறுவர். அவர்கள் மனத்தில் பாலுறவு நினைவுகள் அலை மோதினாலும் அதைத் தள்ளி வைக்க முயல்கின்றனர். பாலுறவைத் தவிர்க்கும் முயற்சியில் கண்ணும் காதும் டப் பட்டுவிடுவதால் உலகில் காணும் அழகைக் கூட அவர்களால் ரசிக்க முடிவதில்லை. அவர்கள் மனம் வாடி வதங்கி விடுகிறது. அழகு எனப்படு வதைப் பெண்களுடன் மட்டும் சம்பந்தப் படுத்துவதால் இவர்கள் அழகையே மறுக்கின்றனர்.

அன்பு என்பதைப் புனிதமென்றும், புனிதம் இல்லாதது என்றும் மானிடருக் கென்றும், தெய்வத்திற்கென்றும் பாகு படுத்தமுடியுமா? அன்பு என்பது ஒருவரிடம் மட்டும் செலுத்தப்படுவதா அல்லது எல்லோரிடமும் செலுத்தப் படுவதா? ''நான் உன்னை அன்புடன் நேசிக்கிறேன்'' என்று கூறினால் மற்ற வர்களிடம் நான் அப்படியில்லை என்றாகிறதா? அன்பு என்பது தனது என்று உரிமைகொண்டாடக்கூடிய ஒன்றா அல்லது பொதுவானதா? அன்பு என்பது நடத்தை விதிகளுடையதா அல்லது அவற்றிற்கும் அப்பாற் பட்டதா? அன்பு என்பது ஒரே குடும்பத்தில் மட்டும் நிலவுவதா அல்லது அதற்கும் அப்பாற் பட்டதா? மனித இனத்திடம் அன்பு கொண்டால் ஒரு வரை மட்டும் நேசிக்க முடியுமா? அன்பு என்பது ஒரு உணர்வா அல்லது மனவெழுச்சியா? அன்பு என்பது இன்பமா அல்லது ஆசையா? இந்தக் கேள்விகள் எல்லாம் அன்பைப் பற்றியவை! இந்தக் கேள்விகள் அன்பு எப்படியிருக்க வேண்டும், எப்படி யிருக்கக் கூடாது என வாதம் செய்யப் பட்டால் நாம் வாழும் கலாச்சாரத்திற்குத் தகுந்தமாதிரி வகுக்கப்பட்ட அமைப்பு களுக்குள் அன்பு அடங்கி விட்டதாக ஆகிவிடாதா?

அன்பு என்றால் என்னவென்று காண்பதற்கு முன் பல நூற்றாண்டுகளாக இந்த வார்த்தையைச் சுற்றி அமைத்துள்ள அலங்காரங்களை அப்புறப்படுத்தி, அது எப்படியிருக்க வேண்டும் அல்லது இருக்கக் கூடாது என்ற கருத்துக்களி லிருந்தும், கொள்கைகளிலிருந்தும் மனம் விடுபட வேண்டும். வாழ்க்கை யில் மனம் சம்பந்தமான விஷயங்களில் இப்படி இருக்க வேண்டும், இப்படி இருக்கலாகாது என்று பாகுபாடு படுத் துவதே போலியான வாழ்க்கை அமைய வழி வகுக்கிறது.

அன்பு என்னும் தீப ஒளியை எப்படிக் கண்டுகொள்வது? அதை எப்படி மற்றவரிடம் செலுத்துவது என்றில்லாமல், அது என்ன என்று எப்படிக் கண்டுகொள்வது? நானே அதைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமென்று ஆர்வம் கொண் டுள்ளதால், மதங்களும், சகமும், பெற்றோர்களும், நண்பர்களும், புத்தகங்களும் அன்பு என்னவென்று கூறியுள்ளவற்றை ஒரு புறம் தள்ளி வைக்க வேண்டும். இப்படித் தள்ளி வைத்து உண்மையைக் காண்பது என்பது மனித இனத்திற்கே ஒரு பெரிய பிரச்சனை. அன்பு ஆயிரம் வழிகளில் விளக்கப்பட்டிருக்கின்றது. நானும் அதுபற்றி ஒரு அமைப்பில் ஈடுபாடு கொண்டு அதில் இன்பம் காண்கின்றேன்; ஆகையால் அதை நான் புரிந்து கொள்ள வேண்டுமாயின் என்னுடைய விருப்பு வெறுப்புடைய கருத்துக்களிலிருந்தும் மனப்பாங்குகளிலிருந்தும் நான் விடு தலையடைய வேண்டும். என் மனம் குழப்பங்களிலும், வேட்கைகளிலும் அலையுண்டு கிடப்பதால் ''முதலில் உன் குழப்பங்களைக் களைந்து விடு. அநேகமாக எவையெல்லாம் அன்பு இல்லை என்பதைக் கண்டு கொண்டால், பிறகு அன்பு என்ன வென்று தெரிந்து கொள்ளலாம்,'' என்று நானே எனக்குக் கூறிக் கொள்கிறேன்.

''உன்னுடைய நாட்டிற்காக எதிரியைக் கொல்லவும்'' என்று அர சாங்கம் கூறுகிறது. அதுதான் நாட்டின் மீது கொண்ட உங்கள் அன்பா? ''கடவுளையடைய பாலுறவு இன்பத்தை விட்டு விடு'', என்று மதங்கள் கூறுகின் றன. அது தான் அன்பா? ஆசை அன்பா குமா? இல்லை என்று கூற வேண்டாம். ஏனெனில் நம்மில் பலர் அதைத் தான் அன்பு என்கின்றனர். இன்பத்தில் ஆசை, உணர்ச்சிகளின் லமாக வரும் இன்பம், பாலுறவு இன்பம் என இவைகளைத் தான் அன்பு என்கிறோம். பாலுறவை நான் எதிர்க்க வில்லை, ஆனால் அதில் என்ன சம்பந்தப்பட்டிருக்கிறது என்று காண வேண்டும். தன்னை இழந்த நிலையை ஒரு கணம் பாலுறவு அளிக் கிறது. மறுபடியும் மனம் பழைய கொந்தளிப்பு நிலைக்கே வந்துவிடும். அந்தக் கணத்தில் துயரம், பிரச்சனை, ''தான்'' இவை இல்லையாதலால் பாலுறவைத் திரும்பத் திரும்ப வேண்டு மென்கிறோம். உங்கள் மனைவியை அன்புடன் நேசிப்பதாகக் கூறுகிறீர்கள். அந்த அன்பில் பாலுறவு இன்பம், உங்கள் குழந்தைகளை அவள் பரா மரித்தல், உங்களுக்கு சமையல் செய்து உணவு பரிமாறுதல் போன்றவை எல்லாம் சம்பந்தப் பட்டிருக்கும். நீங்கள் அவளைச் சார்ந்திருக்கிறீர்கள். அவள் தன்னுடைய உடலை உங்களுக்குத் தந்திருக்கிறாள். உங்களுடன் அவள் உணர்ச்சிகளை பங்கு கொண்டிருக் கிறாள், உங்கள் செய்கைகளுக்கு ஊக்கமளிக்கிறாள், உங்கள் நலனுக்கும் பாதுகாப்புக்கும் தன்னை அர்ப்பணித்துக் கொள்கிறாள். என்றேனும் ஒரு நாள் அவளுக்கு சலிப்பு ஏற்பட்டு உங்களை விட்டு விலகிவிட்டால் உங்கள் மனம் தடுமாறுகிறது. உங்களுக்குப் பிடிக்காத அந்த தடுமாற்றம் தான் பொறாமை, அந்தத் தடுமாற்றத்தில் மனவலி, கவலை, வெறுப்பு, வன்முறையெல்லாம் இருக் கின்றன. அதாவது ,''நீ எனக்கே சொந்த மானவளாக இருக்கும்வரை நான் உன்னை அன்புடன் நேசிப்பேன்.

என்னை விட்டு விலகினால் உன்னை நான் வெறுப்பேன். பாலுறவு மற்றும் என்னுடைய பல தேவைகளை நீ பூர்த்தி செய்யும் வரை நான் உன்னை நேசிப் பேன். இவைகளை நீ தரா விட்டால், உன்னை நான் வெறுப்பேன்'' என்று கூறியதாக ஆகும். எனவே, கணவன், மனைவிக்குள் பகை ஏற்பட்டுப் பிளவு வரும். இருவரிடையேயும் பிளவு இருந்தால் அங்கே அன்பு இருக்க முடியாது. ஆனால் எண்ணங்கள் இந்த முரண்பாட்டு நிலைகளை உண்டு பண்ணாமல் இருந்தால், மனதிற்குள்ளே போராட்டங்கள் மறைந்தால் அப்புறம் தான் கணவன், மனைவி வாழ்வில் அன்பு என்னவென்று தெரிந்து கொள்ள வாய்ப்புண்டு. அப்போது தான் நீங்கள் சுதந்திரமாகவும் அவளும் சுதந்திர மாகவும் இருக்க முடியும். ஆனால், உங்கள் இன்ப தாகத்திற்கு அவளையே சார்ந்திருந்தால் நீங்கள் அவளுடைய அடிமை என்றாகி விடும். அன்புடன் ஒரு வரை நேசிக்கும் போது மனது நேசிக்கப் படுபவரிடமிருந்தும், தன்னிட மிருந்தும் சுதந்திரமாக இருக்க வேண்டும்.

தான் மற்றவருக்கு அல்லது மற்றவர் தனக்கே சொந்தம் என்ற நிலை, மனவியல் பாதுகாப்பை மற்றவர் அளிப்பது என்ற நிலை, மற்றவரைச் சார்ந்திருக்க வேண்டிய நிலை இவற்றி லெல்லாம் கவலை, பயம், பொறாமை, குற்றவுணர்வு முதலியவை இருக்கும். மனத்தில் ஏதோ ஒரு பயம் இருக்கும் வரை அன்பு இருக்க முடியாது. துயரம் தோய்ந்த மனத்திற்கு அன்பு என்ன வென்று தெரியாது. அன்புக்கும் உணர்ச்சிகளுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. ஆகையால், இன்பம், ஆசை என்ற இரண்டிற்கும் அன்பிற்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை.

கடந்த கால எண்ணங்களினால் உருவாக்கப்பட்டதல்ல, அன்பு. எண் ணங்களால் அன்பை வளர்க்க முடியாது. அன்பை வேலி போட்டுப் பொறாமை யினால் கட்டுப்படுத்த முடியாது. ஏனெனில் பொறமை கடந்த காலத்தவை, அன்பு நிகழ்காலத்திற்குரியது. ''நான் அன்புடன் இருப்பேன்'' அல்லது ''நான் அன்பாய் இருந்தேன்'' என்று கூற முடியாது. அன்புடன் நேசிக்கத் தெரிந்து கொண்டால் நீங்கள் யாரையும் பின்பற்ற மாட்டீர்கள். அன்பு எதற்கும் அடி பணியாது. நீங்கள் யாரையாவது அன்புடன் நேசித்தால் அந்த அன்பில் மரியாதையுமில்லை. அவ மரியாதையுமில்லை. யாரையாவது அன்புடன் நேசிப்பது என்றால் என்னவென்று தெரியுமா? வெறுப்பு இல்லாமல், பொறாமை இல்லாமல், கோபம் இல்லாமல், ஒருவருடைய வேலையில் அல்லது எண்ணங்களில் தலையிடாமல், நிந்தனை செய்யாமல், ஒப்பிட்டுப் பாராமல் அன்புடன் நேசிப்பதென்றால் என்னவென்று உங் களுக்குத் தெரியுமா? அன்பு இருக்கு மிடத்தில் அவரை மற்றவருடன் ஒப் பிட்டுப் பார்க்கும் செயல் இருக்குமா? நீங்கள் ஒருவரை முழு மனதுடனும், உள்ளத்துடனும், அன்புடனும் நேசித் தால் ஒப்பிட்டுப் பார்க்கும் செயல் உண்டா? அந்த அன்பில் உங்களையே முழுமையாக இழக்கும்போது ''அவர்'' என்று சொல்லக்கூடியது ஒன்றுமில்லை.

அன்பில் பொறுப்பும், கடமையும் இருக்குமா? அன்புடன் நேசிப்பவர் ''நான் அன்புடன் நேசிப்பது என் பொறுப்பு. அது என் கடமை'' என் பொறுப்பு, 'கடமை' என்ற வார்த்தை களைப் பயன்படுத்துவாரா? கடமைக் காக ஒரு காரியம் செய்யப்பட்டால் அதில் அன்பு இருக்குமா? கடமை உணர்வில் அன்பு இல்லை. கடமை என்ற அமைப்பில் மனிதன் சிக்கினால் அது அவன் மனதை நிலைகுலைத்து விடும். கடமை என்ற உணர்வினால் நிர்ப்பந்தப் படுத்தப்பட்ட செயலில் உங்கள் அன்பும் நேசமும் இருக்க முடியாது. அன்பு இருக்கும் உள்ளத்தில் பொறுப்புணர்வும் கடமை உணர்வும் இராது.

ஒரு மரத்தைப் பேணி வளர்க்க வளமான நிலம் வேண்டும், மரம் நடவேண்டும், தண்ணீர் பாய்ச்சி உரம் போட வேண்டும், அதை அன்புடன் சிரத்தையுடன் பாதுகாக்க வேண்டும். அது போலத்தான் தாம் பெற்ற குழந்தை களையும் பாதுகாக்க வேண்டும். ஆனால் குழந்தைகள இந்தச் சகத்திற்குப் பொருத்தமானவர்களாக இருக்க வளர்த்தால், அவர்களது மரணத்திற்கு வழி வகுத்துக் கொடுத்ததாக முடியும். உண்மையில் மக்கள், தாம் பெற்ற குழந்தைகளை அன்புடன் நேசித்தால் உலகில் போர் என்பதே வராது.

இச்சிற்றிதழ் பிப்ரவரி, ஜூன், அக்டோபர் மாதங்களில் இலவசமாக வெளியிடப்படும்.

BOOK POST

If you do not read Tamil, kindly pass this Newsletter on to your friends.

KRISHNAMURTI FOUNDATION INDIA
Vasanta Vihar, 64 Greenways Road, Chennai - 600 028.
Tel: 4937803 / 4937596.
E-mail: kfihq@md2.vsnl.net.in Website : www.kfionline.org
Website on the teachings of Krishnamurti: www.jkrishnamurti.org